# சேலம் மாநகராட்சி

**2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் அவசரக்கூட்டம் நடைபெறும்.**

---

## பொருள்கள்

**1)** நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.4548/2023/SS1, நாள்.31.05.2023ம் தேதிய கடிதத்தின்படி தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்ட நிதியின் கீழ் (TURIP- Phase-I) சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம், தனிக்குடிநீர் திட்ட குழாய் பதிக்கும் பணிகளால் பாதிக்கப்பட்ட சாலைகள், இயற்கை இடர்பாடுகளினால் சேதமடைந்த சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை மற்றும் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலக பகுதிகளில் சாலை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள 2023–2024ம் ஆண்டு செந்தார விலை விகிதப் பட்டியல்படி மொத்தம் 21 சிப்பங்கள் உள்ளடங்கிய 368 எண்ணிக்கையில் 52.719 கி.மீ. நீளத்திற்கு தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்ட நிதியின் கீழ் (TURIP Phase-I) அரசு மான்யம் ரூ.1771.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது.

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.53–க்கு உட்பட்ட சிப்பம் எண்.9க்கு உட்டபட்ட வள்ளுவர் நகர் 1வது குறுக்கு தெரு, கோட்டம் எண்.45 தாதுபாய் குட்டை EE ரோடு, தாதுபாய் குட்டை FF ரோடு, கோட்டம் எண்.48 நடுத்தெரு, கோட்டம் எண்.53 தார்பாய் காடு தெரு எண்.1, கோட்டம் எண்.54 பார்க் தெரு, தர்மலிங்கம் தெரு நெ.3, கோட்டம் எண்.56 கருங்கல்பட்டி மெயின் ரோடு கோட்டம் எண்.55 பழைய பஜார் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் TURIP 2023-24 திட்டத்தின் கீழ் சாலை வசதி அமைக்க வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.82.30/–க்கு ஒப்பந்தபுள்ளி மூலம் ஒப்பந்ததாரர் M/s,Tectus Infra Private Ltd என்பவருக்கு 0.80% குறைவான ஒப்பந்த தொகைக்கு ரூ.64,35,495.31/–க்கு பணி ஆணை 27.07.2023–ம் தேதி வழங்பப்பட்டு

தொடர்ச்சி..

பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி நடைபெறும் பொழுது மாநகராட்சி ஆணையாளர் மற்றும் மாநகராட்சி பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வின் பொழுது ஒரு சில இனங்கள் மதிப்பீட்டை விட கூடுதலாக நிறைவேற்ற பெறப்பட்ட உத்தரவின் பேரில் கீழ்கண்ட வகையில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு அளவு | கூடுதல் அளவு | கூடுதல் தொகை |
|---|---|---|---|---|
| 1 | Picking 5cm to 10cm old metalled surface and sectioning the Existing surface to laying the road to Proper | 397.00 | 6172.83 | 127777.58 |
| 2 | Providing and laying, spreading and compacting graded stone aggregate to Wet mix macadam (WMM) specification | 90.00 | 617.68 | 1140434.94 |
| 3 | Providing and laying Prime coat of 7 kgs/10 sqm over the WMM surface treated with primer using 7 kgs of | 1190.00 | 3772.97 | 283048.21 |
| 4 | Providing and laying tack coat of 2.5 kgs/10 sqm over the WMM surface treated with binder using 2.5 kgs of | 1190.00 | 113.54 | 1840.48 |
| | | | **மொத்தம்** | **1553101.21** |

மேற்கண்டவாறு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட இனங்களில் இடத்தின் தன்மைக்கேற்ப ஏற்பட்ட மாறுபாடுகளின் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் அளவு பணிகளின் காரணமாக கூடுதல் செலவுத்தொகை ரூ. **15,53,101.21/-** என கணக்கிடப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின்படி செயல்படுத்தும் அளவுகளின் காரணமாக ஏற்படும் சேமிப்புத் தொகையிலிருந்து இக்கூடுதல் செலவினை சரி செய்ய வகை இருப்பதால் ஒப்பந்த தொகைக்கு மிகாமல் இப்பணியினை மேற்கண்ட அவசியமான மாற்றங்களுடன் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணிகளுக்குண்டான செலவின தொகை ரூ.**15,53,101.21**-ஐ வழங்கிடவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை, அரசாணை (Ms) எண்.158, நாள்.02.11.2022 மற்றும் 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table- II இன்படி இப்பணிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ4/ம.எண்.304/R/2023-2024)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**2)** சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்: **45** முதல் **49** வரை உள்ள கோட்டங்களில் குடிநீர் விநியோகம் செய்யும் பழுதடைந்த **3'' 4''** மற்றும் **6''** வால்வுகள் புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு **2022–23** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**8.00** இலட்சத்திற்கு **17–04–2023** இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மாநகராட்சி சட்ட விதி எண் **15** –ன் கீழ் சேலம் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து **25–04–2023** இல் விலைப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட விலைப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன அவற்றின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் விபரம் | விலைப்பட்டியல் விபரம் |
|---|---|---|
| **1.** | M/s Siva Engineering Work,<br>11/5-33-A4 Subramaniya Nagar,<br>Mecheri, Mettur (TK), Salem. | ரூ. **7,99,216.00** |
| **2.** | Thiru. M. Velalagan Engineering,<br>Samattiyur Kv, Nagavalli (Po),<br>Mettur (Tk.) Salem (Dt). | ரூ. **8,03,936.00** |
| **3.** | M/s Sri Ganesa & Co.,<br>18/2 Sakthi Theatre Street,<br>Karumalakoodai, Salem -636 402. | ரூ. **8,06,206.00** |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகைக்கு குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s Siva Engineering Work, ஒப்பந்ததாரர் சேலம் அவர்களின் விலைப்புள்ளி தொகை ரூ. **7,99,216.00** (GST 18% உட்பட) ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: **158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, மேற்கண்ட பணிக்கு M/s Siva Engineering Work, சேலம். ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஏற்கலாம். மேற்படி பணி தொடர்பாக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ6/5287/2023)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**3)** சேலம் சீர்மிகு நகரம் (Salem Smart City Limited) திட்ட நிதியின் கீழ் சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**10**ல் செங்கலணை மெயின் ரோடு மற்றும் பெருமாள் கோவில் தெரு கிழக்கு, மேற்கு பகுதிகளில் வடிகால் மற்றும் தார்ச்சாலை அமைக்கும் பணிகளுக்கான மதிப்பீடு ரூ.**89.50** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு **11.03.2022**ல் மின்னனு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு மாநகராட்சி மன்ற தீர்மானம் எண். **467** நாள் **28.03.2022**ன் படி ஒப்பந்த விலை ரூ. **82,23,685/–** தொகைக்கு (GST நீங்கலாக) திருவாளர். Phoenix & Co.,சேலம் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு, பணி ஆணை **28.03.2022** அன்று வழங்கப்பட்டது.

மேற்படி, கோட்டம் எண்.**10**ல் பெருமாள் கோவில் தெரு கிழக்கு – மேற்கு பகுதிகளில் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு செங்கலணை மெயின் ரோடு பகுதியில் வடிகால் மற்றும் சாலை பணிகள் துவங்கிய நிலையில் **10**வது கோட்ட மாமன்ற உறுப்பினர் அவர்கள் அமைவிடத்தில் உள்ள பல்வேறு ஆக்கிரமிப்புகளை அகற்றிய பின்னர் பணிகளை மேற்கொள்ள கோரியதன் அடிப்படையில் மாநகராட்சி மூலம் பலமுறை முயன்றும் பொதுமக்கள் ஆக்கிரமிப்புகளை அகற்ற எதிர்ப்பு தெரிவித்ததனால் பணி துவங்கபடாததால் அப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய இனங்களுக்கான தொகை சேமிப்பு இனங்களாக ஏற்பட்டது.

இந்நிலையில் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**43**ல் பேச்சியம்மன் நகர், கோட்டம் எண்.**36**ல் சத்யா நகர் ஆகிய பகுதிகளில் நெருக்கமான குடியிருப்பு பகுதியாகவும், போக்குவரத்து நிறைந்த பகுதியாக அமைவதாலும் அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்ச்சாலை அமைத்து கொடுக்கும்படி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் கோரியதன் அடிப்படையில் மாற்று பணியாக தேர்வு செய்யப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டது.

மேற்படி கோட்டம் எண்.**43**ல் பேச்சியம்மன் நகர், கோட்டம் எண்.**36**ல் சத்யா நகர் ஆகிய பகுதிகளில் பணி நடைபெறும் பொழுது ஏற்பட்ட தள அளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும் சில இனங்கள் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களாகவும், சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாகவும் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்கள் இப்பணியில் உட்புகுத்த வேண்டிய அளவும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கூடுதலாகும் இனங்கள் | செய்யப்பட வேண்டிய அளவு | மதிப்பீட்டு விலைவிகிதம் 2021–2022 தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | CC 1:2:4mix using 20mm size ISS gauge HBBG metal etc. complete. | 249.06 | 1474079.04 |
| 2. | Plastering inn cm 1:3mix 20mm thick etc. complete | 461.30 | 219039.08 |
| | **TOTAL** | | 1693118.12 |

தொடர்ச்சி..

மேலும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் அளவு பணிகளும், அதற்கான கூடுதல் செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்படுள்ளது.

| வ.எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1. | Earth work excavation for foundation in ordinary soil etc. complete. | 1160.00 | 117844.40 | 1154.91 | 118955.73 | 1111.33 |
| 2. | CC 1:4:8mix 40mm metal etc. complete. | 133.00 | 610580.39 | 168.71 | 813013.49 | 202433.10 |
| 3. | Providing and laying of M20 Grade Concrete etc. complete. | 8.00 | 58149.52 | 104.59 | 798126.29 | 739976.77 |
| 4. | Conveyance of excavated earth in 2Km Lead etc. | 700.00 | 41160.00 | 855.75 | 51345.00 | 10185.00 |
| | **TOTAL** | | **827734.31** | | **1781440.51** | **953706.20** |

மேற்கண்டவாறு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத புதிய இனங்களை இப்பணியில் உட்புகுத்துவதன் காரணமாகவும் கூடுதலாக ரூ.**16,93,118.12** செலவாகும் எனவும், எங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட இனங்களில் இடத்தின் தன்மைக்கேற்ப ஏற்பட்ட மாறுபாடுகளின் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் அறவு பணிகளின் காரணமாக கூடுதல் செலவுத் தொகை ரூ.**9,53,706.20** எனவும் ஆக மொத்தம் ரூ.**26,46,824/–** என கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பணி குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்க வேண்டிய அவசியம் மற்றும் அவசரம் கருதி ஒப்பந்த தொகைக்கு மிகாமல் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின்படி செயல்படுத்தும் அளவுகளின் காரணமாக ஏற்படும் சேமிப்புத் தொகையிலிருந்து மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்கள் உட்புகுத்தவும், மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் கூடுதல் செலவுத் தொகை ரூ.**26,46,824/–** ஐ இதே மதிப்பீட்டிற்குள் மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் செய்து முடித்ததற்கு பின்னேற்பு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(SSCL/Est.No.3089-15/2022)

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

4) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தனியார் ஒப்பந்த நிறுவனங்கள் மூலமாக மனித வளம் மற்றும் வாகனங்களை பயன்படுத்தி 3 ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான பட்டியல் தொகையினை குறியீட்டு செயல்திறன் அடிப்படையில் ஒப்பந்ததாருக் வழங்கிடவும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 க்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்ட அரசாணை (எம்.எஸ்) எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, நாள்:24.08.2022 ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.24608/2022 இஏ2 நாள்: 21.10.2022 ல் அனுமதி அளிக்கப்பட்டது. அதன்பேரில், மேற்படி பணிக்கு ஆண்டு மதிப்பீடு ரூ.7374.90 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.35883/2022/ EA1/SWM-8 நாள்: 17.02.2023 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிர்வாக அனுமதியில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள புற ஒப்படைப்பு சேவை வழங்குவோர் /முகமைகள்/ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை மேற்கொள்ள சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.913 நாள்: 28.02.2023ல் அனுமதிக்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.001/2022/ DO1 நாள்: 27.02.2023ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

அதன்பேரில், மேற்படி பணிக்கு 06.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில், திருவாளர்கள். ஆர்.எஸ்.கே. டெக் டிரேடர்ஸ் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கு குறைக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியின் குறைக்கப்பட்ட விலையான மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.3228.50 (மதிப்பீட்டை விட 0.74% குறைவு) என்பதை ஏற்றுக்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு திருவாளர்கள். ஆர்.எஸ்.கே. டெக் டிரேடர்ஸ் (பி) லிட், துறையூர், திருச்சி நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கி, திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண். 108, நாள். 27.04.2023ல் அனுமதிக்கப்பட்டு, ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: எப்1/18183/2022 நாள்: 19.05.2023ல் பணிஆணை வழங்கப்பட்டு, 18.08.2023 முதல் சூரமங்கலம் மற்றும் அஸ்தம்பட்டி மண்டலங்களிலும், 18.09.2023 முதல் அம்மாபேட்டை மற்றும் கொண்டலாம்பட்டி மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் துவங்கப்பட்டு தொடர்ந்து நாளதுவரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒப்பந்த விதிமுறைகள் வரிசை எண்.6 ல் ஒப்பந்தகாலம் 3 ஆண்டுகள் எனவும், செயல்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் திருப்தி அளிக்காத பட்சத்தில் உடனடியாக ஒப்பந்தத்தை இரத்து செய்யலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது. எனவே, 01.06.2023 முதல் பணிகளை மேற்கொள்ள தெரிவித்து 19.05.2023 ல் பணிஆணை வழங்கப்பட்டு, 18.08.2023 முதல் பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

எனவே, ஒப்பந்ததாரருக்கு அனுமதி வழங்கப்பட்டு ஓராண்டு காலம் நிறைவு பெற்றுவிட்டமையாலும், மேற்படி தனியார் நிறுவனம் செயல்திறன் குறீயீட்டை நிறைவு செய்யும் வகையில் செயல்பட்டு வருவதாலும், 18.08.2024 முதல் 17.08.2025 வரையுள்ள மேலும் ஓராண்டு காலத்திற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒப்பந்தத்தை நீட்டித்து திருவாளர்கள். ஆர்.எஸ்.கே. டெக் டிரேடர்ஸ் (பி) லிட், துறையூர், திருச்சி நிறுவனத்திற்கு தற்காலிக ஒப்பந்த நீட்டிப்பு ஆணை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. இந்த ஒப்பந்த கால நீட்டிப்பு முற்றிலும் தற்காலிகமானது. அரசின்/ நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் உத்திரவிற்கேற்ப மாறுதலுக்கு உட்பட்டது.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து விலைப்புள்ளி உயர்வு செய்வது குறித்து உரிய வழிகாட்டுதல்கள் வரப்பெற்ற பின்னரே, அதன் அடிப்படையில் தொகை உயர்வு செய்து வழங்கப்படும். அதுவரை ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலான தொகை மட்டுமே வழங்கப்படும்.
3. ஆண்டுதோறும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் உயர்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலியை அனைத்து பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும். இதற்காக கூடுதல் தொகை எதுவும் மாநகராட்சியிடம் கோரக்கூடாது.
4. இனிவரும் காலங்களில் பிறப்பிக்கப்படும் அரசின்/ நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்படுகிறது.
5. ஒப்பந்த விதிமுறைகளின்படி ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் திருப்தி அளிக்காத பட்சத்தில் உடனடியாக எவ்விதமான முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தத்தை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**அலுவலகக்குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

**(எப்1/18183/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**5)** அம்ருத் **2.0** (Atal mission for Rejuvenation and Urban Tranformation 2.0) திட்டத்தில் சேலம் மாநகராட்சியில் உள்ள அனைத்து கோட்டங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தங்குதடையின்றி 24x7 மணிநேரமும் பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் திட்ட ஆலோசகர் திருவாளர் இன்பராஇன் (இந்தியா) பிரைவேட் லிமிட் பெங்களூர் நிறுவனத்தின் மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்து பொது மக்களின் பங்களிப்புடன் (Public Private Partnership (PPP) விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு முன்னதாக அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு அதனை பரிசீலனை செய்து ரூ. **758.13** கோடிக்கு நிர்வாக அனுமதி

தொடர்ச்சி..

வழங்கி அரசாணை எண் (Ms.) No.39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்: 06–03–2024 ல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் உத்தேச பங்களிப்பு தொகை ரூ.227.44 கோடிகள் ஆகும் (30சதவீதம் ) அரசின் பரிசீலனையின் போது சேலம் மாநகராட்சியில் மிகமிக குறைவான எண்ணிக்கையில் வணிக உபயோக குடிநீர் இணைப்புகள் உள்ளதால் அதனை உயர்த்திட அறிவுறுத்தப்பட்டது.

இம்மாநகராட்சியில் வணிக உபயோக குடிநீர் இணைப்புகளுக்கான முன் வைப்புத் தொகையும் மாதாந்திர கட்டணமும் மற்ற மாநகராட்சிகளைக் காட்டிலும் அதிக அளவில் உள்ளதாலும், அனைத்து வகையான வணி நிறுவனங்களுக்கும் வேறுபாடின்றி ஒரே விதமான கட்டணம் நிர்ணயம் செய்துள்ளதாலும், வணிக உபயோக குடிநீர் இணைப்புகளை பெறுவதை சிறு வணிக நிறுவனங்கள் தவிர்க்க முயல்வதாலும், எற்கனவே உள்ள சிறு வணிக நிறுவனங்கள் குடிநீர் இணைப்பை துண்டித்துக்கொள்ள முயல்வதாலும் அதன் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. வணிக உபயோக குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை உயர்த்த வணிக நிறுவனங்கள் அதன் கட்டிட அளவின்படி தரம் பிரித்து கட்டணம் நிர்ணயம் செய்தால் சிறு வணிக நிறுவனங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குவதன் மூலம் மாநகராட்சிக்கான வருமானத்தை உயர்த்த இயலும்.

சேலம் மாநகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணம் விபரம்.

| வ. எண் | குடியிருப்பு | | வணிக நிறுவனங்கள் | | தொழிற்சாலைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | வைப்பு தொகை | மாதாந்திர உபயோகிப்பாளர் கட்டணம் ரூ. | வைப்பு தொகை | மாதாந்திர உபயோகிப்பாளர் கட்டணம் ரூ. | வைப்பு தொகை | மாதாந்திர உபயோகிப்பாளர் கட்டணம் ரூ. |
| 1. | ரூ. 7500 | ரூ. 151 | ரூ.50000 | ரூ.3001 | ரூ.100000 | ரூ.3001 |

மேலே குறிப்பிட்டுள்ளவாறு குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு குடிநீர் மாதாந்திர உபயோகிப்பாளர் கட்டணம் மற்றும் வைப்பு தொகைகள் ஏற்கனவே உள்ள நடைமுறைப்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 24 X 7 திட்டமானது பொதுமக்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ளதால், இத்திட்டத்தில் வழங்கப்படும் இணைப்புகளுக்கு குறைந்தபட்ச வைப்பு தொகை மற்றும் உபயோகிப்பாளர் மாதாந்திர குடிநீர் கட்டணங்கள் வணிக நிறுவனங்களின் பரப்பளவிற்கு தகுந்தாற்போல் கீழ்கண்டுள்ளவாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்ய வேண்டி உள்ளன.

தொடர்ச்சி..

| வ. எ ண் | இடத்தின் பரப்பளவு | குடியிருப்பு | | வணிக நிறுவனங்கள் | | தொழிற்சாலைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வைப்பு தொகை | மாதாந்திர உபயோகிப்பா ளர் கட்டணம் ரூ. | வைப்பு தொகை | மாதாந்திர உபயோகிப்பா ளர் கட்டணம் ரூ. | வைப்பு தொகை | மாதாந்திர உபயோகிப் பாளர் கட்டணம் ரூ. |
| 1 | அனைத்து குடியிருப்பு களுக்கும் | ரூ. 10000 | ரூ. 151 | – | – | – | – |
| 2 | 1000 ச.அடிக்குள் உள்ள வணிக நிறுவனங்கள் | – | – | ரூ.20000 | ரூ.300 | – | – |
| 3 | 1001 முதல் 3000 ச.அடி வரை | – | – | ரூ.25000 | ரூ.400 | – | – |
| 4 | 3001 முதல் 5000 ச.அடி வரை | – | – | ரூ.25000 | ரூ.500 | – | – |
| 5 | 5001 முதல் 10000 ச. அடி வரை | – | – | ரூ.30000 | ரூ.700 | – | – |
| 6 | 10000 ச.அடிக்கு மேல் | – | – | ரூ.30000 | ரூ.1000 | – | – |
| 7 | தொழிற்சாலைகள் | – | – | – | – | ரூ.50000 | ரூ.1500 |

மேற்கண்டுள்ளவாறு குடிநீர் கட்டணம் மற்றும் வைப்பு தொகைகள் மாற்றி அமைப்பதால் மாநகராட்சி கூடுதல் வருவாயும் மாதாந்திர உபயோகிப்பாளர் கட்டணம் வணிக நிறுவனங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் குறைக்கப்பட்டுள்ளதால் கூடுதலாக அதிக குடிநீர் இணைப்புகள் பெற முடியும். மேலும் மேற்கண்ட கட்டண விபரமானது மற்ற மாநகராட்சிகளில் வசூலிக்கும் குடிநீர் கட்டணத்தை விட குறைவாகவே உள்ளன. மேலும் இத்திட்டத்தின் மூலம் 24 மணி நேரமும் பொதுமக்களின் தேவைக்கேற்ப தேவையான அளவு குடிநீர் கிடைக்கும் என்பதால், மேற்கண்டுள்ள குடிநீர் கட்டணம் / வைப்பு தொகைகளை மாற்றி அமைத்து வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

அனுமதிக்கலாம்.

**(E3 /12006/ 2021)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

குடியிருப்புகளுக்கான குடிநீர் இணைப்பு வைப்புத்தொகை தற்போது நடைமுறையில் உள்ள ரூ.7500/– மட்டும் வசூலித்திட தீர்மானிக்கப்பட்டது.

**6)** சேலம் மாநகராட்சி **2023–24–**ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்: **27** இல் அரிசிபாளையம் அவ்வை நகர் பகுதியில் அமைந்துள்ள நகர்ப்புற நல வாழ்வு மையம் கட்டிடத்திற்கு பிளம்பிங் பணி, எலக்ட்ரிக்கல் பணி, வர்ணம் பூசுதல், மற்றும் இதர கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **40.60** இலட்சத்திற்கு **24–07–2023** இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டு, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு **0.39%** குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. M. செல்வம் ஒப்பந்ததாரர், சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **32,45,439.50** ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். **342**, நாள்: **22–08–2023** இல் அனுமதிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டது.

இப்பணியினை மேற்கொள்ளும் போது பணி தளத்தின் தன்மைக்கேற்ப ஒப்பந்தத்தில் உள்ள சில இனங்கள் கூடுதலாக செய்வதற்கும், மதிப்பீட்டில் இல்லாத சில இனங்கள் புதியதாக மேற்கொள்ள வேண்டியும் இருந்தது. அவ்வாறு புதியதாக உள்ள இனங்களுக்கு ஒப்பந்தத்தில் (BOQ) விலைவிகிதம் இல்லாததால், தமிழ்நாடு பொதுப்பணித்துறை செந்தார விலைவிகிதப்பட்டியலில் (SOR 2023-24) உள்ள இனங்களின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்த விபரம் பின்வருமாறு.

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் :** (BOQ)

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Collection,supply and filling of Well gravel from approved quarry to work site and stocking to the Departmental gauge for premeasurement as directed by the Departmental Engineer, to required depth not more than 15cm depth including cost and Conveyance of gravel to site and all labour charges for filling etc., Complete complying with Standard Specification | 23.00 | 6456.6 | **44.86** | 14198.19 | 7741.63 |
| 2 | Supplying and fixing in position cement based hydraulically pressed Anti-skid tiles (pattern design) 20mm thick in cm 1:3-20mm thick & pointed with same colour of cement etc., complete as per standard specification. | 31.00 | 45595.1 | **122.06** | 179428.20 | 133833.09 |
| 3 | Painting two coats with best synthetic enamel paint of approved Colour for New Wood works the rate is inclusive of all materials, brushes and scaffolding charges etc., complete complying with standard specification(paint should be got approved by the Departmental Engineer befor use on work. | 60.00 | 8941.2 | **59.77** | 9682.74 | 741.54 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | Wiring with 2x1.5sqmm (22/0.3) PVC insulated SC unsheathed Cu.Conductor of 1100 V grade in suitable PVC rigid pipe on wall and ceiling with PVC accessories with 150 x I00 x for open PVC plug point.inter locking CS plug with painting of suitable colour with continuous earth wire connection of 14 SWG TC wire for PVC Plug Point (SD-36) | 36.00 | 39528.0 | **47.00** | 51606.00 | 12078.00 |
| 5 | Wiring with 2 x 1.5 sqmm (22 / 0.3) PVC insulated SC unsheathedCu. Conductor of 1100V grade in suitable PVC rigid pipe concealed in | 140.00 | 435960.0 | **178.00** | 554292.00 | 118332.00 |
| 6 | Supply and fixing of following Water Supply Materials etc. complete | | | | | |
| A | 75mm PVC Pipe | 30.00 | 4152.0 | **56.30** | 7769.40 | 3617.40 |
| B | 75mm PVC Elbow | 5.00 | 288.5 | **9.00** | 513.00 | 224.50 |
| C | 75mm PVC Tee | 3.00 | 215.7 | **3.00** | 216.00 | 0.30 |
| D | 32mm PVC MTA | 5.00 | 80.0 | **20.00** | 320.00 | 240.00 |
| E | 32mm GM Gatevalve | 5.00 | 4998.0 | **6.00** | 6000.00 | 1002.00 |
| F | 25mm UPVC Elbow | 32.00 | 931.2 | **48.00** | 1392.00 | 460.80 |
| 7 | Provision & supply ,fixing of SS sink & labour charges | **1.00** | 20000.0 | 3.00 | 55620.00 | 35620.00 |
| | **Total** | | **567146.3** | | **881037.53** | **313891.26** |

**II மதிப்பீட்டில் இல்லாத SOR இனங்கள் :**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | Supplying and erecting in the position of MS sheets including necessary supports for plane surfaces using MS Sheets of size 90cm x 60cm and or suitable shifted with welded mild steel angles of size 25mm x 25mm x 3mm for boarding laid over silver oak (coun | | | | | |
| | a) Coloum centring | | | **4.40** | 5190.77 | 5190.77 |
| | b) Slab centring | | | **4.58** | 4332.82 | 4332.82 |
| 2 | Supplying, fabricating and placing in position mild steel or tar steel bars for all reinforced cement concrete items of work including cost of steel transporting, straightening, cutting, bending, cranking, blinding, welding etc. including cost of MS or RT | | | **196.05** | 17722.92 | 17722.92 |
| 3 | Reinforced cement concrete 1:1½:3 mix (One cement one and half CS sand three aggregate) using 20mm ISS gauge HBBG metal from the approved quarry including mixing, laying, consolidating, curing cost and conveyance of all materials to site and all labour charges etc., complete as per standard specification | | | **2.02** | 16221.61 | 16221.61 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | Supply and run of 25mm x 6mm tinned copper flat with necessary clamps / supports on wall / floor / ground for earth connection | | | **2.00** | 18054.00 | 18054.00 |
| 5 | Supplying and fixing of Cudappa slab of 20/30/40/50mm thick for Cup board including cost of materials and labour etc complete | | | **11.21** | 5114.56 | 5114.56 |
| 6 | 32mm UPVC Elbow | | | **23.00** | 1007.40 | 1007.40 |
| 7 | 32mm UPVC Tee | | | **15.00** | 855.00 | 855.00 |
| 8 | 32mm UPVC Cupling | | | **5.00** | 208.00 | 208.00 |
| 9 | 32mm UPVC FDA | | | **10.00** | 550.00 | 550.00 |
| 10 | 32mmX25mm UPVC Reducer | | | **13.00** | 362.70 | 362.70 |
| 11 | 25mm UPVC Shoe | | | **14.00** | 700.00 | 700.00 |
| 12 | 25mm UPVC Cupling | | | **2.00** | 65.40 | 65.40 |
| 13 | 20mm anglce valve | | | **26.00** | 15600.00 | 15600.00 |
| 14 | 25mm CPVC Pipe | | | **27.80** | 5098.52 | 5098.52 |
| 15 | 20mm CPVC Pipe | | | **13.00** | 1528.80 | 1528.80 |
| 16 | 25mm CPVC Elbow | | | **21.00** | 1060.50 | 1060.50 |
| 17 | 25mm UPVC MTA | | | **14.00** | 560.00 | 560.00 |
| 18 | 20mm CPVC Tee | | | **4.00** | 156.80 | 156.80 |
| 19 | 20mmX25mm CPVC Thread Elbow | | | **6.00** | 900.00 | 900.00 |
| 20 | 20mmx25mm UPVC Thread Elbow | | | **34.00** | 5100.00 | 5100.00 |
| 21 | 25mm CPVC Union | | | **4.00** | 554.80 | 554.80 |
| 22 | 40mm PVC Pipe | | | **42.90** | 4350.06 | 4350.06 |
| 23 | 40mm PVC Shoe | | | **2.00** | 120.00 | 120.00 |
| 24 | 40mm PVC Elbow | | | **37.00** | 745.55 | 745.55 |
| 25 | 40mm PVC Door Elbow | | | **3.00** | 150.00 | 150.00 |
| 26 | 40mmX75mm Reducer | | | **3.00** | 210.00 | 210.00 |
| 27 | 75mm PVC Shoe | | | **12.00** | 666.00 | 666.00 |
| 28 | 110mm PVC Shoe | | | **13.00** | 1084.20 | 1084.20 |
| 29 | 110mmm Air Doom | | | **1.00** | 70.00 | 70.00 |
| 30 | 160mm Shoe | | | **4.00** | 500.40 | 500.40 |
| 31 | 20mmx15mm Running nipple | | | **30.00** | 6000.00 | 6000.00 |
| | Total | | | | 114840.81 | 114840.81 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : | | **567146.30** | | **881037.53** | **313891.26** |
| 2 | மதிப்பீட்டில் இல்லாத SOR இனங்கள்: | | | | **114840.81** | **114840.81** |
| | Total | | **567146.30** | | **995878.34** | **428732.07** |

மேற்படி பணியில் BOQ வில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023–2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டது. SOR ல் உள்ள மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் **2023–24** ஆம் ஆண்டு பொது பணி துறையின் செந்தார விலைவிகிதப்பட்டியல் படி செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் திரு. M. செல்வம் என்பவர் மூலம் அசல் மதிப்பீட்டிற்குள், மேற்படி கூடுதல் பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான கூடுதல் செலவுத் தொகை ரூ. **428732.07**/–னை, திரு. M. செல்வம் ஒப்பந்ததாரர், சேலம் அவர்களுக்கு வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

(E6/ Est.No.13 / B / 2023-24)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**7)** சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்: **50** முதல் **54** வரை உள்ள கோட்டங்களில் குடிநீர் விநியோகம் செய்யும் பழுதடைந்த **3'' 4'' 6'' 8''** மற்றும் **16''** வால்வுகள் புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு **2022–23** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **7.60** இலட்சத்திற்கு மாநகராட்சி சட்ட விதி எண் **15**–ன் கீழ் சேலம் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து **25–04–2023** இல் விலைப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட விலைப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன அவற்றின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் விபரம் | விலைப்பட்டியல் விபரம் |
|---|---|---|
| **1.** | M/s Siva Engineering Work,<br>11/5-33-A4 Subramaniya Nagar,<br>Mecheri, Mettur (TK), Salem. | ரூ. **7,59,449.00** |
| **2.** | Thiru. M. Velalagan Engineering,<br>Samattiyur Kv, Nagavalli (Po),<br>Mettur (Tk.) Salem (Dt). | ரூ. **7,62,152.00** |
| **3.** | M/s Sri Ganesa & Co.,<br>18/2 Sakthi Theatre Street,<br>Karumalakoodai, Salem -636 402. | ரூ. **7,63,568.00** |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகைக்கு குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s Siva Engineering Work, ஒப்பந்ததாரர் சேலம் அவர்களின் விலைப்புள்ளி தொகை ரூ. **7,59,449.00** (GST 18% உட்பட) ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: **158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, மேற்கண்ட பணிக்கு M/s Siva Engineering Work, சேலம். ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஏற்கலாம். மேற்படி பணி தொடர்பாக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ6/5288/2023)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

8) <u>திருமதி மா.சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் உள்ள அய்யந்திருமாளிகை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது. மழைக் காலங்களில் மழைநீர் கசிந்து வருகிறது. எனவே, பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்டிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

9) <u>திருமதி மா.சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் உள்ள அய்யந்திருமாளிகை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் உள்ள மைதானத்தில் அதிகமாக செடி, கொடிகள் புதர் போல் வளர்ந்து உள்ளது. ஆட்கள் வைத்து சுத்தம் செய்தாலும் மீண்டும் மீண்டும் வளர்ந்து வருகிறது. அதனால் அந்த மைதானத்தில் பாம்பு, பெருக்கான் மற்றும் பூச்சிகள் அதிகமாக வருவதனால் மாணவர்கள் மைதானத்திற்கு செல்வதற்கு மிகவும் பயப்படுகிறார்கள். எனவே, அந்த மைதானத்தில் உள்ள செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்து பேவர் பிளாக் கற்களை பதித்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

10) <u>22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி போடிநாயக்கன்பட்டி ஏரியிலிருந்து வெளியேறும் தண்ணீர் முறையான வடிகால் கால்வாய் இல்லாததால் சிறிது மழை பெய்தாலும் அதிக அளவு தண்ணீர் கோட்டம் 22ல் குடியிருப்பு பகுதிகளில் புகுந்து பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத நிலை உள்ளது.

எனவே, போடிநாயக்கன்பட்டி பொது கழிப்பிடத்திலிருந்து மிட்டா காடு வரை சுமார் 600 மீட்டர் மழை நீர் வடிகால் கால்வாய் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

11) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் தமிழ்நாடு மளிகை அருகே, வரதராஜர் தெரு வாசல், எஸ்.எம்.சி. காலனி ஒரு சில இடங்களில் மின்சார தெருவிளக்குகள் இல்லை. ஆகவே ஆங்காங்கே தெருவிளக்கு அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

12) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டம் காத்தான் முனியப்பன் ஆலயம் அருகே உள்ள பாலம் லாரி ஏற்றி உடைந்து போய்விட்டது. உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழல் உள்ளதால் உடனடியாக செப்பனிட இம்மாமன்றம் தீர்மானின்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

13) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டம் ஆஸ்கார் தியேட்டர் அருகே உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு உள் நுழையும் பகுதியில் சிறுபாலம் சேதாரம் ஆகி உள்ளதால் அதை செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

14) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் புதிய சுண்ணாம்பு சூளை, அப்பர் தெரு, எஸ்.எம்.சி.காலனி, கஸ்தூரி பாய் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் வாய்கால் பழுதடைந்து மிகவும் மோசமாக தொற்றுநோய் பரப்பும் நிலையில் உள்ளதால், அவற்றை உடன் செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

15) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 37வது கோட்டம் செல்வநகர் பகுதியில் தார்சாலை சாலை அமைக்கும் பணிக்கு பதிலாக அதே பகுதியில் கழிவுநீர் செல்லும் வாய்க்கால் உள்ள மண்சாலையை தார்சாலையாக மாற்றிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

16) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 37வது கோட்டம் பகுதியில் உள்ள சர்வே எண்.1/2 வார்டு AL பிளாக்–44 அந்த பகுதியில் மாநகராட்சி மூலமாக மக்கும் குப்பைகளை உரமாக்கும் மையம் (நுண்ணுயிர் மையம்) அமைத்திடவும், மேற்படி பகுதியில் உள்ள மண் திட்டை அகற்றிட உரிய நடவடிக்கை எடுத்திடவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**17)** சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்: 55 முதல் 60 வரை உள்ள கோட்டங்களில் குடிநீர் விநியோகம் செய்யும் பழுதடைந்த 3'' 4'' 5'' 6'' 10'' மற்றும் 12'' வால்வுகள் புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு 2022–23 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 7.60 இலட்சத்திற்கு மாநகராட்சி சட்ட விதி எண் 15–ன் கீழ் சேலம் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 25–04–2023 இல் விலைப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட விலைப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன அவற்றின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் விபரம் | விலைப்பட்டியல் விபரம் |
|---|---|---|
| 1. | M/s Siva Engineering Work,<br>11/5-33-A4 Subramaniya Nagar,<br>Mecheri, Mettur (TK), Salem. | ரூ. 7,59,471.00 |
| 2. | Thiru. M. Velalagan Engineering,<br>Samattiyur Kv, Nagavalli (Po),<br>Mettur (Tk.) Salem (Dt). | ரூ. 7,70,897.00 |
| 3. | M/s Sri Ganesa & Co.,<br>18/2 Sakthi Theatre Street,<br>Karumalakoodai, Salem -636 402. | ரூ. 7,72,294.00 |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகைக்கு குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s Siva Engineering Work, ஒப்பந்ததாரர் சேலம் அவர்களின் விலைப்புள்ளி தொகை ரூ. 7,59,471.00 (GST 18% உட்பட) ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: 158 நாள்: 02–11–2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table –II இன் படி ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு, மேற்கண்ட பணிக்கு M/s Siva Engineering Work, சேலம். ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஏற்கலாம். மேற்படி பணி தொடர்பாக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ6/5289/2023)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
27–08–2024.